# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம்

*(2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*


*2016, ஓகத்து மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம்**

[*2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ 32/2016*

**காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; காணாமற் போன ஆட்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; காணாமற்போன ஆட்களின் உறவினர் களுக்கு உதவி வழங்குவதற்கும் ; காணாமற்போன ஆட்கள் பற்றிய தரவுத்தளத்தை நிறுவுவதற்காகவும் ; சொல்லப்பட்ட அலுவலகத்துக்கு குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் ஏற்புடையற்பாலன வான நடவடிக்கைமுறைகளையும் வழிகாட்டு நெறி களையும் எடுத்துக்கூறுவதற்காகவும்; அத்துடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலு டன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளை வான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டமூலம்.**

*கடத்தலுக்கு பலிக்குட்படுத்தப்பட்டோராகக் காணாமற்போன வர்களும், யுத்தத்தில் காணாமற்போன ஆட்களும் அல்லது ஆயுதந்தாங்கிய மோதல்கள், அரசியல் அமைதிக்குலைவு மற்றும் குடியியல் குழப்பங்கள் சம்பந்தமாக வேறுவகையில் காணாமற் போன ஆட்களும் உட்பட, காணாமற்போன ஆட்கள் பற்றிய சம்பவங்கள் இருந்துள்ளனவாதலாலும்:* *முன்னுரை.*

*அத்துடன் காணாமற்போன ஆட்களின் உறவினர்கள், அத்தகைய ஆட்கள் எச்சூழ்நிலைகளில் காணாமற்போனார் களென்பதையும், அத்தகைய காணாமற்போன ஆட்களின் கதியையும் அவர்கள் எங்குள்ளார்களென்பதையும் அறிவதற்கு உரித்துடையோராக உள்ளனராதலாலும்:*

*அத்துடன் காணாமற் போன ஆட்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கும்; காணாமற்போன ஆட்களினதும் அவர்களின் உறவினர்களினதும் உரிமைகளையும் அக்கறைகளையும் பாது காப்பதற்கும்; மீளநிகழாதிருப்பதனை உறுதிப்படுத்துமுக மாகவும் அவசியமான எல்லா வழிமுறைகளையும் எடுப்பதற்குக் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமொன்றைத் தாபித்தல் அவசியமாகவுள்ளதென ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற தாதலாலும்:*

2-PL 010031-1,061 (2016/06)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** (1) இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

சட்டத்தின் குறிக்கோள்கள்.

**2.** காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டம் பின்வருவனவற்றுக்கு அவசியமான எல்லா வழிமுறைகளும் எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகும்:-

(அ) காணாமற்போன ஆட்களைத் தேடிக்கண்டு பிடிப்பதற்காகத் தோதான வழிமுறைகளை ஏற்பாடுசெய்வதற்கும், அத்தகைய ஆட்கள் எச்சூழ்நிலைகளில் காணாமற்போனார்கள் என்பதையும் அவர்களின் கதியையும் தெளிவுபடுத்துவதற்கும்;

(ஆ) இச்சட்டத்தின் பொருளுக்குட்பட "காணாமற்போன ஆட்கள் "பற்றிய சம்பவங்களைக் குறைக்கும்முகமாக இயைபான அதிகாரிகளுக்கு விதப்புரைகளைச் செய்வதற்கும்;

(இ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக காணாமற்போன ஆட்களினதும் அவர்களின் உறவினர்களினதும் உரிமைகளையும் அக்கறைகளையும் பாதுகாப்பதற்கும்;

*(ஈ)* அத்தகைய காணாமற்போன ஆட்கள் அல்லது அவர்களின் உறவினர்கள் முறையான எந்த நிவர்த்திக்கான வழிகளை நாடக்கூடுமோ முறையான அந்த நிவர்த்திக்கான வழிகளை அடையாளம் காண்பதற்கும்.

## பாகம் I

### காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தைத் தாபித்தல்

**3.** *(1)* (இதனகத்துப்பின்னர் "காஆஅ" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "காணாமற்போன ஆட்கள் அலுவலகம்" எனவழைக்கப்பட்டு அறியப்படவேண்டிய அலுவலகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை (காஆஅ) தாபித்தல்.*

*(2)* காஆஅ இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டு மென்பதுடன், அதன் கூட்டிணைப்புப்பெயரில் வழக்குத் தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*(3)* காஆஅ வின் தலைமையலுவலகம் கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும். காஆஅ காலத்துக்குக்காலம், அதன் பணிப்பாணையை எய்துவதற்கு அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினவான பிராந்திய அலுவலகங்களைத் தாபிக்கலாம்.

**4.** *(1)* *(அ)* அரசியலமைப்பு பேரவையின் விதப்புரையின் மேல் சனாதிபதியால் நியமிக்கப்படவேண்டிய ஏழு உறுப்பினர்களைக் காஆஅ கொண்டிருத்தல் வேண்டும்.

*காஆஅ வின் அமைப்பு விதியும் அமைப்பும், தவிசாளரை நியமித்தலும், உறுப்பினர்களை அகற்றுதலும், காஆஅ வின் தலைமையலுவலகமும் பிராந்திய அலுவலகங்களும்.*

*(ஆ)* காஆஅ வின் உறுப்பினர்களுள் ஒருவர், அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மேல், காஆஅ வின் தவிசாளராக சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், அரசியலமைப்புப்பேரவை,காஆஅ வின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்குச் சனாதிபதியினால் கவனத்துட் கொள்ளப்படுவதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்களை விதந்துரைக்கலாம்.

(2) காஆஅ வின் உறுப்பினர்களை நியமிப்பதற்காக விதப்புரைகளைச் செய்வதில், அரசியலமைப்புப் பேரவை பின்வருவனவற்றுக்கு உரிய கவனஞ்செலுத்துதல் வேண்டும்:-

(அ) காஆஅ வின் அமைப்பு இலங்கைச் சமூகத்தின் பல்லினத் தன்மையைப் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துவதற்கும்; அத்துடன்

(ஆ) காஆஅ வின் உறுப்பினர்கள் நிகழ்வு கண்டறிதல் அல்லது நுண்ணாய்வு, மனிதவுரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமான சட்டம், மனிதாபிமான பதிலிறுப்பு என்பவற்றின் முன்னனுபவம் கொண்ட ஆட்களாகவிருத்தலை, அல்லது காஆஅ வின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான ஏனைய தகைமைகளை உடையவர்களாகவிருத்தலை உறுதிப்படுத்துவதற்கும்.

காஆஅ வின் தவிசாளரும் உறுப்பினர்களும்.

**5.** (1) சனாதிபதி, அத்தகைய நியமனங்களுக்கான அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைகளைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள், காஆஅ வின் தவிசாளரையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும்.

(2) அத்தகைய பதினான்கு நாட்காலப்பகுதியினுள் சனாதிபதி அவசியமான நியமனங்களைச் செய்வதற்குத் தவறும் பட்சத்தில், அத்தகைய காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து-

(அ) காஆஅ வின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், காஆஅ வின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு விதந்துரைக்கப் பட்ட பெயர்களின் நிரலில் எந்த ஆளின் பெயர் முதலாவதாகக் காணப்படுகின்றதோ அந்த ஆள் காஆஅ வின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்

(3) காஆஅ வின் தவிசாளர் பிரதான நிறைவேற்று அலுவல ராக இருத்தல் வேண்டும்.

*உறுப்பினர் களின் பதவிக்காலம்.*

**6.** காஆஅ வின் ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய காலம் முடிவுறுமுன்னர் அவர் பதவியை வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டு (3) காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

*உறுப்பினர் களை அகற்றுதல்.*

**7.** (1) ஏழாம் உட்பிரிவின்கீழ் அகற்றப்படுவதன் மூலமாக வல்லாது வேறுவகையாகத் தமது பதவியை வறிதாக்குகின்ற எவரேனும் உறுப்பினர், மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு மேலதிகக் காலத்துக்கு மட்டும் மீளநியமிக்கப்படுவதற்காகக் கவனத்துட்கொள்ளப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

ஆயின், ஆளெவரும், இரண்டுக்கு மேற்பட்ட தவணைகளுக் காக காஆஅ வின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு உரித்துடையவராதலாகாது:

ஆயின், மேலும், பதிற்கடமையாற்றும் உறுப்பினராக உறுப்பினரொருவர் எக்காலப்பகுதியின்போது நியமிக்கப்படுகின் றாரோ அக்காலப்பகுதி, இவ்வுட்பிரிவின் பொருளுக்குட்பட "பதவிக் காலம்" ஒன்றாகக் கருதப்படுதலாகாது.

(2) உறுப்பினரொருவரின் பதவி –

(அ) அத்தகைய உறுப்பினர் இறப்பதன்மேல்;

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அத்தகைய உறுப்பினர் அத்தகைய பதவியி லிருந்து விலகுவதன்மேல்;

(இ) இதன் (3) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மீது அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்; அல்லது

(ஈ) அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலம் முடிவுறுவதன்மேல்,

வறிதாதல் வேண்டும்.

(3) காஆஅ வின் உறுப்பினரொருவர், அத்தகைய ஆள் -

(அ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் கடனிறுக்கவகையற்றவரெனத் தீர்க்கப்பட்டால்;

(ஆ) சபாநாயகரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் கலந்தாலோசனையுடன் செய்யப்பட்ட பிரதமரின் விதப்புரையின்மீது ஏற்படுத்தப்பட்ட சனாதிபதியின் அபிப்பிராயத்தில் காஆஅ வின் உறுப்பினரொருவர் என்ற முறையில் அவரது கடமைகளுடன் முரண்படுகின்ற அக்கறை முரண்பாட்டைக் கொண்டுள்ளவரெனக் காணப்பட்டால்;

(இ) உள அல்லது உடற்றகுதியீனம் காரணமாகப் பதவியில் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவராகவிருந்தால்;

(ஈ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்டவொரு நீதிமன்றத்தினால் சித்தசுவாதீனமற்றவரென வெளிப்படுத்தப்பட்டால்;

(உ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்; அல்லது

(ஊ) காஆஅ வின் முன்னனுமதியைப் பெறாமல் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதராதிருந்தால்,

சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(4) தவிசாளர், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, தவிசாளரின் பதவிக்காலம், அவரது காஆஅ வின் உறுப்பாண்மைக் காலப் பகுதியாதல் வேண்டும்.

(6) (அ) காஆஅ வின் தவிசாளர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாக அல்லது இலங்கையிலில்லாமை அல்லது அத்தகைய வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக் குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி, அவரினிடத் திற் செயலாற்றவென காஆஅ வின்வேறெவ ரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

(ஆ) காஆஅ வின் உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக அல்லது வேறு இயலாமை காரண மாக அல்லது இலங்கையிலில்லாமை அல்லது அத்தகைய வேறேதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிக மாக இயலாதவராக வந்தால், சனாதிபதி, அவரினி டத்திற் செயலாற்றவென வேறெவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(இ) 4(1) ஆம், 5 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், தவிசாள ராக அல்லது உறுப்பினராகச் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனுமாள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) காஆஅ வின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் ஏதேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

காஆஅ வின் கூட்டங்கள்.

**8.** (1) தவிசாளர் காஆஅ வின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்துக்கு அவர் வருகை தராதிருக்கும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்தில் சமூகமளித்துள்ள காஆஅ வின் உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்குத் தமது உறுப்பாண்மையிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) காஆஅ வின் தவிசாளர், தமது சொந்த வாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, காஆஅ வானது, காஆஅ வின் கூட்டங்களை நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துதலும் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

கூட்ட நடப்பெண்.

**9.** காஆஅ வின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

## பாகம் II

### காஆஅ வின் தத்துவங்களும், கடமைகளும் பணிப்பாணையும்

காஆஅ வின் பணிப்பாணை.

**10.** (1) காஆஅ பின்வருவனவற்றுக்கான பணிப்பாணையைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) காணாமற்போன ஆட்களைத் தேடிக்கண்டுபிடித்தலும் அதற்குத் தோதான வழிமுறைகளை அடையாளங் காணுதலும், அத்துடன் அத்தகைய ஆட்கள் எத்தகைய சூழ்நிலைகளில் காணாமற்போனார்களென்பதையும் அவர்களின் கதியையும் தெளிவுபடுத்துதலும்;

(ஆ) இச்சட்டத்தின் பொருளுக்குட்பட காணாமற்போன ஆட்கள் பற்றிய சம்பவங்கள் பற்றி எடுத்துரைப்பதற்கு இயைபான அதிகாரிகளுக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(இ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக காணாமற்போன ஆட்களினதும் அவர்களின் உறவினர்களினதும் உரிமைகளையும் அக்கறைகளையும் பாதுகாத்தல்;

(ஈ) காணாமற்போன ஆட்களும் காணாமற்போன ஆட்களின் உறவினர்களும் எந்த நிவர்த்திக்கான வழிகளுக்கு உரித்துடையோராகவுள்ளனரோ அந்த வழிகளை அடை யாளம்காணுதலும், அதுபற்றி காணாமற்போன ஆளுக்கும் (உயிருடன் காணப்படின்) அத்தகைய காணாமற்போன ஆளின் உறவினருக்கும் அறிவித்தலும்;

(உ) தற்போது நிறைவேற்றப்படுகின்ற அல்லது வேறு நிறுவனங்களினால், ஒழுங்கமைப்புகளினால், அரசாங்கத் திணைக்களங்களினால், விசாரணை ஆணைக்குழுக்களினால் அத்துடன் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களினால் முன்னர் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகள்மூலம் பெறப்பட்ட காணாமற்போன ஆட்களுடன் தொடர்புபட்ட தரவுகளை ஒன்றுதிரட்டுதலும், கிடைக்கக்கூடியவான எல்லாத் தரவுகளையும் இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட தரவுத்தளத்தினுள் ஒருமுகப்படுத்துதலும்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசிய மான அத்தகைய வேறெல்லா அவசியமான செயல்களையும் செய்தல்.

(2) காஆஅ வின் இப்பணிப்பாணை,"காணாமற்போன ஆட்கள்" எக்காலப்பகுதியின்போது காணாமற்போன ஆளொருவராக வந்தாரோ அக்காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, அத்தகைய காணாமற்போன ஆளுக்கு நீடித்தல் வேண்டும்.

காஆஅ வின் பொதுவான தத்துவங்கள்.

**11.** காஆஅ பின்வரும் பொதுவான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) காஆஅ வின் பணிப்பாணையை எய்துவதற்கு அவசிய மானவாறாக, எவரேனுமாளுடன் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்புடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல் ;

(ஆ) காஆஅ பயனுள்ளவகையில் பணியாற்றுவதனை உறுதிப்படுத்துவதற்கான விதிகளை ஆக்குதல்;

(இ) காஆஅ வின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறை வேற்றுதல் தொடர்பாக காஆஅ வின் எல்லாப் பணி யாட்டொகுதியினரினாலும் பின்பற்றப்பட வேண்டி யவையும், பால்தொடர்புபட்ட கொள்கைகளை உள்ளடக்கக்கூடியவையுமான விதிகளையும் வழிகாட்டு நெறிகளையும் காலத்துக்குக்காலம் வழங்குதல்;

(ஈ) பணியாட்டொகுதியினரையும் ஆலோசகர்களையும் நியமித்தலும் பதவிநீக்குதலும் காஆஅ வுக்கு பகிரங்க அலுவலர்கள் மாற்றுச்சேவைக்கமர்த்தப்படுதலைக் கோருதலும்;

(உ) இச்சட்டத்தில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்ட அக்கூறு களுக்கும் பிரிவுகளுக்கும் மேலதிகமாக காஆஅ வின் பயனுள்ள நிருவாகத்துக்கும் பணியாற்றுகைக்கும் தேவைப்படுகின்றவான அத்தகைய குழுக்களை அத்துடன் /அல்லது பிரிவுகளை அத்துடன் /அல்லது கூறுகளைக் காலத்துக்குக்காலம் தாபித்தலும், மற்றும் அத்தகைய குழுக்களுக்கு, பிரிவுகளுக்குஅத்துடன் கூறுகளுக்கு அவசியமானவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கையளிப்பதற்கான தத்துவத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

**12.** காஆஅ பின்வரும் புலனாய்வுத் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:- புலனாய்வுத் தத்துவங்கள்.

(அ) காணாமற்போன ஆளொருவர் எப்போது காணாமற்போன ஆளாக வந்திருக்கக்கூடுமென்பதனைப் பொருட்படுத்தாது, அத்தகைய காணாமற்போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகளைக் காணாமற்போன ஆளின் எவரேனும் உறவினரிடமிருந்து அல்லது வேறெவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்பிடமிருந்து பெறுதல்.

(ஆ) காஆஅ விற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டைப் பின்பற்றி அல்லது முன்னர் தாபிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள், காணாமற்போன ஆட்கள் பற்றிய ஆணைக்குழுக்கள் அல்லது காணாமற்போனமைகள் அல்லது காணாமற்போன ஆட்கள் தொடர்பான சார்த்துதல்கள் பற்றி விசாரணைசெய்துள்ள ஆணைக்குழுக்கள் என்பவற்றிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் காணாமற்போன ஆளொருவர் எங்குள்ளார் அத்துடன்/அல்லது காணாமற்போனமைக்கான சூழ்நிலைகள் என்பன பற்றிய விசாரணையொன்றை அத்துடன்/அல்லது புலனாய்வொன்றைத் தொடங்குதல்:

ஆயின், எவ்வாறாயினும், காஆஅ பின்வருவனவற்றுக்கு முன்னுரிமையளிக்கலாம்:-

(i) மிக அண்மையில் இடம்பெற்றுள்ள காணமற்போன ஆட்கள்பற்றிய சம்பவங்கள்;

(ii) எச்சம்பவங்கள்பற்றிக் கணிசமான அளவிலான சான்று ஏலவே கிடைக்கக் கூடியதாகவுள்ளதோ அச்சம்பவங்கள்; அல்லது

(iii) காஆஅ வின் அபிப்பிராயத்தில் பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தனவாகவுள்ள அத்தகைய சம்பவங்கள்.

(இ) பின்வருவனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக் கப்படாமல், காணமற்போன ஆட்கள் பற்றிய விடயங் களைப் புலனாய்வு செய்வதற்கு அவசியமான எல்லா நடபடிகளையும் எடுத்தல்:

(i) எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுதலும் பெறுத லும், வீடியோவழி மாநாடுகளை நடாத்து வதற்கான வசதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் உட்பட, சாட்சிகளாக ஆட்களை விசாரணை செய்தலும்;

(ii) கூற்றொன்றை அளிப்பதற்கு அல்லது அவரது உடைமையிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு காஆஅ வின் முன்னர் சமுகமளிக்கும்படி இலங்கையில் இருக்கின்ற அல்லது வசிக்கின்ற எவரேனுமாளைக் கட்டளைவிட்டழைத்தல்;

(iii) சான்றுக் கட்டளைச்சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் ஏல்தகவுடையதாகவிரா திருக்கக்கூடியதான எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான ஏதேனும் கூற்றை அல்லது விடயத்தை ஏற்றுக்கொள்ளுதல்;

(iv) பலிக்குட்படுத்தப்பட்டோருக்காகவும் சாட்சி களுக்காகவும் சொந்தப் பாதுகாப்பை உறுதிப் படுத்த உதவுவதற்கு, தேவைப்படின், அந்தரங் கமான தகவல்களை அல்லது தகவல்களை இரகசியமாகப் பெற்றுக்கொள்வதற்கான நடை முறையைத் தாபித்தல்;

(v) அந்தரங்கத்தன்மையின் நிபந்தனையின் மீதான தகவல்களை ஏற்றுக்கொள்வதற்கான நடை முறையைத் தாபித்தல்.

(ஈ) சந்தேகிக்கப்பட்ட புதைகுழிகளின் அகழ்வை அத்துடன்/ அல்லது தோண்டியெடுத்தலை நிறைவேற்றுவதற்கு நீதிமன்றக்கட்டளையொன்றுக்காக ஆள்புல நியாயாதிக்கங்கொண்டுள்ள தோதான நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தலும், அத்தகைய அகழ்வின்போது அல்லது தோண்டியெடுத்தலின் போது மற்றும் அதனைப் பின்பற்றி எடுக்கப்படும் ஏனைய நடவடிக்கைகளின் போது அவதானிப்பாளரொருவராகச் செயலாற்றுதலும்;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான உதவியை ஏதேனும் அரச, அரசாங்க, மாகாண அல்லது உள்ளூர் அதிகாரசபையிடமிருந்து அல்லது முகவர்நிலையத்திடமிருந்து அல்லது அதன் எவரேனும் அலுவலரிடமிருந்து கோருதல். வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியில் முரணாக எது எவ்வாறிருப்பினும், உதவிக்கான கோரிக்கை எந்த அதிகாரசபைக்கு, முகவர்நிலையத்துக்கு அல்லது அலுவலருக்கு காஆஅ வினால் செய்யப்படுகின்றதோ அத்தகைய ஏதேனும் அதிகாரசபை அல்லது முகவர்நிலையம் அல்லது அத்தகைய எவரேனும் அலுவலர் அத்தகைய உதவியை உடனடியாக அளித்தல் வேண்டும். அத்தகைய உதவியானது, தகவல்களை வழங்குவதனையும் அத்தகைய அதிகாரசபையின், முகவர் நிலையத்தின் அல்லது அலுவலரின் உடைமையிலுள்ள ஆவணங்களைக் காண்பிப்பதனையும் உள்ளடக்குதல் வேண்டும் ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படுதலாகாது;

(ஊ) ஏதேனும் தடுத்துவைத்தல் இடத்தினுள், பொலிசு நிலையத்தினுள், மறியற்சாலையினுள் அல்லது எவரேனுமாள் நீதிமுறைக் கட்டளை மூலமோ அல்லது வேறு வகையாகவோ தடுத்துவைக்கப்பட்டுள்ளாரென அல்லது முன்னர் தடுத்துவைக்கப்பட்டிருந்தாரெனச் சந்தேகிக்கப்பட்ட வேறேதேனுமிடத்தினுள் எந்நேரத்திலும் ஆணையின்றிப் பிரவேசிப்பதற்கும் அத்துடன் அதன்கண் தடுத்து வைத்தல் நிலைமைகளை நிச்சயிப்பதற்கு அத்தகைய பரிசோதனைகளைச்

செய்யும்படியும் அல்லது அதன்கண் காணப்படுகின்ற எவரேனுமாளிடமிருந்து அத்தகைய விசாரணைகளைச் செய்யும்படியும், அவசியமாகக்கூடியவாறான எவையேனும் ஆவணங்களை அல்லது பொருட்களை எடுத்து வைத்திருக்கவும் காஆஅ வின் குறித்துரைக்கப்பட்ட அலுவலரொருவருக்கு எழுத்தில் அதிகாரமளித்தல் :

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், தேடுகைக்கான வழி காட்டுநெறிகளைத் தயாரித்து மூன்று மாதகாலப் பகுதியினுள் அவற்றைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்:

காஆஅ ஆனது , ஆணையொன்று இன்றி தேடுகையை நடாத்தியதிலிருந்து இருபத்தி நான்கு மணித்தியாலங்களுக்குள் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்;

(எ) காஆஅ வினால் நடாத்தப்படுகின்ற புலனாய்வொன்றுக்கு இயைபான சான்றைக் கொண்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட எவையேனும் வளவுகளைத் தேடுகையிடுவதற்கும், காஆஅ வினால் நடாத்தப்படுகின்ற ஏதேனும் புலனாய்வின் நோக்கங்களுக்காக அவசியமெனக்கருதப்படுகின்ற ஏதேனும் பொருளைப் பரிசோதனை செய்வதற்கும் அதன் பிரதிகளை எடுப்பதற்கும், அதிலிருந்து பிரித்தெடுப்புக்களைச் செய்வதற்கும், அதனைக் கைப்பற்றி வைத்திருப்பதற்கும் காஆஅ வினால் பொலிசாரை அல்லது காஆஅ வின் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களை இயலச் செய்வதற்குத் தேடுதல் ஆணையொன்றை வழங்குவதற்காக ஆள்புல நியாயாதிக்கங்கொண்ட நீதிவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல்;

(ஏ) இச்சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு "காணாமற்போன ஆட்கள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினுள் அடங்காதவையும் காஆஅ வின் முன்னர்கொணரப்பட்டவையுமான காணாமற்போன ஆட்கள்பற்றிய எல்லா விடயங்களையும், முறைப்பாட்டாளருடனான முறையான கலந்தாலோசனைக்குப்பின்னர் பொலிசாருக்கு அல்லது வேறேதேனும் இயைபான சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு ஆற்றுப்படுத்துதல்;

(ஐ) புலனாய்வைத் தேவைப்படுத்துகின்றதும், தண்டனைச் சட்டக்கோவையின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் பொருளுக்குட்பட்டதுமான தவறொன்று புரியப்பட்டுள்ளதென காஆஅ வுக்கு தோன்றுமிடத்து, காஆஅ, பலிக்குட்படுத்தப்பட்டோரின், உறவினர்களின் மற்றும் சமூகத்தின் மிகச்சிறந்த நலன்களைக் கவனத்துட் கொண்டு, தகுதியானவர்களென அது கருதுகின்றவாறாகக் காணாமற்போன ஆளின் அத்தகைய உறவினர்களுடனான கலந்தாலோசனையின் பின்னர், அதனை இயைபான சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அல்லது வழக்குத்தொடுக்கும் அதிகாரிக்கு அறிக்கையிடலாம்: அத்தகைய அறிக்கை, காணாமற்போன ஆளின் குடியியல் அந்தஸ்து (காணாமற்போன ஆளின் பெயர், வயது மற்றும் பால் போன்றவை)" காணாமற்போன ஆள் கடைசியாகக் காணப்பட்ட இடம் (இடங்கள்) அல்லது மாவட்டம் (மாவட்டங்கள்) மற்றும் அதுபற்றிய தேதி என்பன தொடர்பான தகவல்களை வழங்கும் :

ஆயின், சாட்சியொருவர் சம்மதமளிக்குமிடத்து, காஆஅ, புலனாய்வின் நடைமுறையில் பயன்படுத்துவதற்கு அத்தகைய சாட்சியிடமிருந்து அத்தகைய இயைபான அதிகாரி கூற்றொன்றைப் பெறுவதனை இயலச்செய்வதற்கென, அத்தகைய சாட்சியின் விபரங்களையும் இயைபான அதிகாரிக்கு அறிவிக்கலாம்.

*காஆஅ வின் பணிகளும் கடமைகளும்.*

**13.** (1) காஆஅ வுக்கு பின்வரும் பணிகள் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) (i) நடைபெற்றுக்கொண்டிருக்கும் முடிவுறாத புலனாய்வொன்று, முறைப்பாடொன்று எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் காணாமற்போன ஆளொருவரென முடிபுசெய்வதற்கு காஆஅ வுக்கு போதிய விடயப்பொருள்கள் உள்ளவிடத்து, காணப்படாமைக்கான சான்றிதழொன்றை வழங்குவதற்குப் பதிவாளர் தலைமையதிபதியை

இயலச்செய்வதற்கென, அத்தகைய பொருள்பட, அத்தகைய காணாமற்போன ஆளின் உறவினருக்கு இடைக்கால அறிக்கையொன்றை அது வழங்குதல் வேண்டும்.

(ii) புலனாய்வொன்று முடிவுற்றதன்மேல், முறைப்பாடொன்று எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் காணாமற்போன ஆளொருவராகவுள்ளார் அல்லது இறந்துள்ளார் எனக் காஆஅ முடிபு செய்யுமிடத்து, விடயத்துக்கேற்ப, காணப்படாமைக்கான சான்றிதழொன்றை அல்லது இறப்புச் சான்றிதழொன்றைப் பதிவாளர் தலைமையதிபதி வழங்குவதனை இயலச்செய்வதற்கென, அத்தகைய பொருட்பட, அத்தகைய காணாமற்போன ஆளின் உறவினருக்கு அது அறிக்கையொன்றை வழங்குதல் வேண்டும்.

(iii) இடைக்கால அறிக்கையொன்றில் அல்லது அறிக்கையொன்றில் அறிக்கையிடப்பட்ட முடிபு பிழையானதென மேலதிகப் புலனாய்வுகள் வெளிப்படுத்துமிடத்து, காஆஅ, அதனை உறவினருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அதேநேரத்தில் மேற்கொண்டு முன்னேற்றம்பற்றிப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(iv) காணாமற்போன ஆளொருவரின் உறவினருக்கு இடைக்கால அறிக்கைகள், அறிக்கைகள் அல்லது தகவல்கள் வழங்குவதில், உறவினர்களுக்கிடையேயான முன்னுரிமை ஒழுங்குவரிசை இதன் 27ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கு வரிசையாக விருத்தல் வேண்டும்.

(v) 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் அல்லது பதிவாளர் தலைமையதிபதியினால் காணப்படாமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படுவதை அனுமதிக்கின்ற அத்தகைய வேறு

சட்டம் நடைமுறையிலிருக்கும்போது காணப் படாமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படு வதனை வசதிப்படுத்துவதற்கு மட்டுமே இடைக்கால அறிக்கைகளும், அறிக்கைகளும் வழங்கப்படுதல் வேண்டும்;

(ஆ) காணாமற்போன ஆளின் சம்மதத்துக்கமைய, காணாமற்போன ஆளொருவர் உயிரோடிருப்ப வராகக் கண்டுபிடிக்கப்படின், அவர் எங்குள்ளார் என்பது பற்றிய தகவல்களை காஆஅ அவ்வாறு செய்வதற்கு இயன்றதாகவிருக்குமிடத்தெல்லாம், காணாமற்போன ஆளின் எவரேனும் உறவினருக்கு அல்லது வேறெவரேனும் முறைப்பாட்டாளருக்கு வழங்குதல்;

(இ) அத்தகைய காணாமற்போன ஆள் தொடர்பில் நடை பெற்றுக்கொண்டிருக்கும் புலனாய்வின் நிலைமை பற்றிய தகவல்களை, அது நடைபெற்றுக்கொண்டி ருக்கும் புலனாய்வுக்குத் தடங்கலாகவிருக்கும் அல்லது காணாமற்போன ஆளின் மிகச்சிறந்த நலன்களுக்குச் சாத்தியமாக விராதென காஆஅ கருதினாலொழிய, காணாமற்போன ஆளொருவரின் உறவினர்களுக்கு வழங்குதல்:

ஆயின், காணாமற்போன ஆளின் உறவினர்கள் இறந்துள்ளவிடத்து அல்லது அவர்களை அறிய முடியாதவிடத்து அல்லது அத்தகைய உறவினர் களைக் கண்டுபிடிப்பதற்கு காஆஅ இயலாதுள்ள விடத்து, காஆஅ, அத்தகைய புலனாய்வு தொடர்பான நாளாதுவரையாக்குதல்களைத் தோதான அதிகாரிக்கு அல்லது ஒழுங்கமைப்புக்கு வழங்கலாம்;

(ஈ) புலனாய்வொன்று முடிவுறுவதன் மேல் காஆஅ, 15 (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய-

(i) காணாமற்போன ஆள் இறந்துள்ளவிடத்து அல்லது அவர் எங்குள்ளாரென அறியமுடியாதவிடத்து,

அத்தகைய ஆள் காணாமற்போன சூழ்நிலைகளையும் அவரின் கதியையும் விடயத்துக்கேற்ப காணாமற்போன ஆளின் உறவினர்களுக்கும் வேறு முறைப்பாட்டாளருக்கும் அறிவித்தல் வேண்டும்.

(ii) காணாமற்போன ஆள் எங்குள்ளாரென அறியப்படுமிடத்து, (ஆ) என்னும் உட்பந்திக்கமைய, அத்தகைய ஆள் காணாமற்போன சூழ்நிலைகளைக் காணாமற்போன ஆளின் உறவினர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

(உ) காணாமற்போன ஆளின் உறவினர்களுக்கு, தேவைப்படுமிடத்து, உள சமூக ஆதரவுட்பட, நிருவாக உதவியை மற்றும் சேமநல சேவைகளை வழங்குதல் அல்லது வழங்குதலை வசதிப்படுத்துதல்;

(ஊ) இயைபான அதிகாரிக்கு, நட்டஈடு உட்பட ஆனால் அதற்கு வரையறுக்கப்படாமல் காணாமற்போன ஆட்களுக்கு அத்துடன்/ அல்லது காணாமற்போன ஆட்களின் உறவினர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுதலை விதந்துரைத்தல் அத்துடன்/அல்லது உள சமூக சேவைகளுட்பட ஏனைய நிருவாக மற்றும் சேமநலச் சேவைகள் வழங்கப்படுதலை விதந்துரைத்தல்;

(எ) பலிக்குட்படுத்தப்பட்டவரின் மற்றும் சாட்சியின் பாதுகாப்புக்கான முறைமையொன்றை ஏற்படுத்துதலும் வலுவுறுத்துதலும்:

ஆயின், இதன் ஏற்பாடுகள், 2015ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் நியதிகளின்படி தோதான கட்டளைகளை நாடுவதற்குத் திறத்தவர்களுக்கு அல்லது காஆஅ வுக்கு உள்ள உரிமைகளைப் பங்கப்படுத்தலாகாது;

(ஏ) காணாமற்போன ஆட்கள் சம்பந்தமான எல்லா விபரங்களையும் உள்ளடக்கும் தரவுத்தளமொன்றை உருவாக்குதலும், முகாமைசெய்தலும், பேணுதலும்;

(ஐ) காஆஅ வுக்கு தகவல்கள் வழங்குகின்ற பலிக்குட் படுத்தப்பட்டோர், உறவினர்கள், சாட்சிகள் மற்றும் வேறு தகவல்தருநர்கள் என்போருக்கு, பாரதூரமான குற்றச் செயல்களை இயைபான சட்டவலுவுறுத்தல் அதிகாரிக்கு அல்லது வழக்குதொடுக்கும் அதிகாரிக்கு அறிக்கையிடுவதற்கு அவர்களுக்குள்ள உரிமையை யும் மற்றும் நிருவாகமுறையிலான நிவாரணத்துக் கான உரிமைக் கோரிக்கைகளை அவர்கள் எந்த வழிமுறையினூடாகச் செய்யக்கூடுமோ அந்த வழிமுறைகள் கிடைக்கக்கூடியமையும் உட்பட, கருமங்களை இயைபான அதிகாரிகளுக்கு நேரடியாக ஆற்றுப்படுத்துவதற்கான அவர்களின் உரிமை பற்றி அறிவித்தல்;

(ஒ) காணாமற்போன ஆட்கள்பற்றிய காரணங்கள், சம்பவங்கள் மற்றும் விளைவுகள் தொடர்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்கு முகமாகவும், காணாமற்போன ஆட்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் பொருளா தார, உள சமூக, சட்ட மற்றும் நிருவாகமுறையிலான ஆதரவுக்கான அவர்களின் அணுக்கத்தை வசதிப் படுத்துவதற்காகவும் பொதுமக்களின் ஆதரவை உருவாக்குமுகமாகவும் தோதான நடபடிகளை எடுத்தல்;

(ஓ) பின்வருவன தொடர்பான விதப்புரைகளுட்பட, அதன் பணிப்பாணைக்கு இயைபாக, இயைபான அதிகாரி களுக்கு விதப்புரைகளைச் செய்தல் :-

(i) காஆஅ வின் பணியின்போது அடையாளங் காணப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில், எதிர் கால காணாமற்போகின்றமைகளைத் தடுத்தல்;

(ii) நினைவுகூருதலும் மற்றும் ஒப்புக்கோடல் வழிவகைகளும் முறைகளும்;

(iii) அடையாளங்காணப்படத்தக்கனவல்லாத எச்சங்களையும் அடையாளங்காணப்படத்தக்க எச்சங்களையும் கையாளுதல்;

(iv) ஒன்றில் காணமற்போன ஆட்களின் சூழ்நிலைகள் அல்லது அவர்கள் எங்குள்ளார்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்தமுடியாத விடயங்களைக் கையாளுதல்;

(v) அந்தரங்கத்தன்மையையும் தரவுகளைப் பாதுகாத்தலும் தொடர்பிலான எல்லா இயைபான சட்டங்களை உரிய கவனத்துட்கொண்டு பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக் காணாமற்போன ஆட்கள் பற்றிய பிரச்சனைகள் மீதான தகவல்களை வெளியிடுதல்;

(vi) காணாமற்போன ஆட்கள் தொடர்பான தேசிய சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அபிவிருத்தி செய்தல்; அத்துடன்

(vii) இழப்பீடு, உள- சமூக ஆதரவு மற்றும் பலிக்குட்படுத்தப்பட்டோரினாலும் காணாமற்போன ஆட்களின் உறவினர்களினாலும் சமூக, பொருளாதார நிலமைகளை சீராக்குவதற்கான வழிவகை கள்;

ஆயின் பந்தி (ஓ) என்பதன்கீழ் சொல்லப்பட்ட விதப்புரைகளைச் செய்வதில் காஆஅ, தோதானதென அது கருதுகின்றவாறு காணாமற்போன ஆட்களின் உறவினர்களை அத்துடன் அல்லது காணாமற்போன ஆட்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒழுங்கமைப்புகளைக் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(2) 25 ஆம் பிரிவுக்கமைய, காஆஅ வின் முடிவுகள், ஏதேனும் குற்றவியல் அல்லது குற்றவியல் பொறுப்பை எழுப்புதலாகாது.

*காணாமற்போன ஆட்களின் உறவினர்களினதும் உரிமைகளை காஆஅ உறுதிப்படுத்துதல்.*

**14.** காஆஅ, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், காணாமற்போன ஆட்களினதும் காணாமற்போன ஆட்களின் உறவினர்களினதும் உரிமைகள், அந்தஸ்தைக் கருத்திற்கொள்ளாமலும் எத்தகையனவுமான எவையேனும் ஏதுக்களின்மீதான ஓரங்கட்டுதலின்றியும் ஒப்புரவான அடிப்படையில் வலுவுறுத்தப்படுதல் வேண்டும்.

*தகவல்களின் அந்தரங்கத் தன்மை.*

**15.** (1) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் முரணாக எது எவ்வாறிருப்பினும், காஆஅ வின் ஒவ்வோர் உறுப்பினரும், அலுவலரும், சேவையாளரும் ஆலோசகரும், இச்சட்டத்தின் கீழான தமது கடமைகளைப் புரிவதிற்றவிர, இரகசியமாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட கருமங்கள் தொடர்பாக அந்தரங்கத்தன்மையைப் பேணிப்பாதுகாத்தலும் பேணிக்காப்பதில் உதவுதலும் வேண்டும். 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய தகவல்கள் தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது.

(2) காஆஅ வின் உறுப்பினர், அலுவலர், சேவையாளர் அல்லது ஆலோசகர் எவரும் ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது வேறுவகையாக, இச்சட்டத்தின்கீழ் தமது கடமையைப் புரிவதில் இரகசியமாக அவருக்கு அறிவிக்கப்பட்ட ஏதேனும் விடயத்தை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக அவசியமாகக் கூடியவாறுதவிர, காண்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(3) காஆஅ, அதன் எல்லாத்தரவுகளினதும் தரவுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான தொழில்நுட்பப் பாதுகாப்புகளுக்குட்பட அவசியமான எல்லா நடபடிகளையும் எடுத்தல் வேண்டும்.

## பாகம் III

### காஆஅ வின் செயலகம் கண்டுபிடிக்கும்கூறு பலிக்குட்படுத் தப்பட்டோர் மற்றும் சாட்சிப்பாதுகாப்புப் பிரிவு

*காஆஅ வின் செயலகம்.*

**16.** (1) காஆஅ, செயலகமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; காஆ அலுவலகத்தின் அலுவல்களை நிருவகிக்கும் பொறுப்பு அதற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறு காஆஅ அதன் தத்துவங் களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதற்கு உதவுவதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களும் பணியாட் தொகுதியினரும் காஆஅ வினால் நியமிக்கப்படலாம்.

(3) காஆஅ வின் உறுப்பினர்களும் (இச் சட்டத்தின்கீழான அவர்களின் பணிகளின் வரையறுக்கபட்பட்ட நோக்கத்துக்காக) காஆஅ வின் அலுவலர்களும் பணியாட்டொகுதியினரும், (19ஆம் அத்தியாயமான) தண்டனைச்சட்டக் கோவை, இலஞ்சச் சட்டம் மற்றும் (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் "பகிரங்க சேவையாளர்களாகக்" கருதப் படுதல் வேண்டும்.

(4) காஆஅ, இலஞ்சச்சட்டத்தின் பொருட்களுக்குட்பட "அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்" ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*காஆஅ வின் கண்டு பிடிக்கும் கூறு.*

**17.** (1) காஆஅ வின் கண்டுபிடிக்கும் கூறொன்றிருத்தல் வேண்டும்; காணாமற்போன ஆட்களைத் தேடிக் கண்டுபிடிப் பதற்கும் அத்தகைய காணாமற்போனமையின் சூழ்நிலைகளை யும் அத்தகைய காணாமற்போன ஆள் எங்குள்ளார் என்பதையும் அவரின் கதியையும் தெளிவுபடுத்துவதில் உதவுவதற்கும் அது பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) கண்டுபிடிக்கும் கூறு, காஆஅ வினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றலுவலர் ஒருவரினால் தலைமைதாங்கப்படுதல்

வேண்டுமென்பதுடன், இயைபான தொழில்நுட்ப மற்றும் சட்ட வைத்திய நிபுணத்துவம் கொண்டவர்களுட்பட, தகுதிவாய்ந்த, அனுபவம் பெற்ற மற்றும் தகைமைகொண்ட புலனாய்வாளர் களை உள்ளடக்குதலும் வேண்டும்.

காஆஅ வின் பலிக்குட்படுத் தப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப் பிரிவு.

**18.** (1) காஆஅ வினுள் பலிக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப்பிரிவொன்றிருத்தல் வேண்டும்; அது, பலிக்குட்படுத்தப்பட்டோர், சாட்சிகள் மற்றும் காணாமற்போன ஆட்களினது உறவினர்களின் உரிமைகளைப்பாதுகாத்தலும் அவர்களின் தேவைகளுக்கும், அக்கறைகளுக்கும் கரிசனை யளித்தலும் வேண்டும்.

(2) பலிக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப் பிரிவு, காஆஅ வினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றலுவல ரொருவரினால் தலைமைதாங்கப்படுதல் வேண்டும்.

(3) பிரிவானது, காஆஅ வுடன் தொடர்புகொள்ளும் பலிக்குட்படுத்தப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேதான எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

(4) பலிக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப் பிரிவு, பலிக்குட்படுத்தப்பட்டோர், சாட்சிகள் மற்றும் காணாமற் போன ஆட்களின் உறவினர்கள் என்போருக்கான உள - சமூக ஆதரவுட்பட, நிருவாகச் சேவைகளையும் சேமநலச் சேவைகளை யும் வழங்கலாம் அல்லது அவற்றின் வழங்குகைக்கு வசதியளிக் கலாம்.

(5) பலிக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப் பிரிவு, வழங்கப்பட்ட தகவல்களின் எல்லாப் பயன்பாடுகளும் எதிர்காலப் பயன்பாடுகளும்பற்றி பலிக்குட்படுத்தப்பட்டோருக் கும் சாட்சிகளுக்கும் அறிவித்தல் வேண்டும்.

(6) பலிக்குட்படுத்தப்பட்டவர் மற்றும் சாட்சிப் பாதுகாப்புப் பிரிவு, அது அவசியமாகக் கருதுமிடத்து ஏனைய சட்ட வலுவுறுத் தல் முகவர்நிலையங்களுடன் ஒருங்கிணையலாம்.

## பாகம் IV

### நிதிகள்

*நிதிகள்.*

**19.** (1) இச்சட்டத்தினால் காஆஅ வுக்கு குறித்தளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அதனை இயலச்செய்வதற்கு அரசானது காஆஅ வுக்கு போதியநிதிகளை வழங்குதல் வேண்டும். அத்தகைய நிதிகள் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

*காஆஅ வின் சம்பளங்கள்.*

**20.** காஆஅ வின் உறுப்பினர்களது சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் திரட்டுநிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவர்களின் பதவிக்காலங்களின்போது குறைக்கப்படுதலுமாகாது.

*காஆஅ நிதிகளைத் திரட்டுதல்.*

**21.** காஆஅ ஆனது,-

(அ) இலங்கையினுள் மானியக் கொடைகள், கொடைகள் அல்லது அறக்கொடைகளைப் பெற்று ; அத்துடன்

(ஆ) இலங்கைக்கு வெளியேயிருந்து அதன் பணிப்பாணையை எய்துதலுக்காக மானியக்கொடைகள், கொடைகள் அல்லது அறக்கொடைகளைப் பெறுவதன் மூலமும்

நிதிகளைத் திரட்டலாம்.

ஆயின், (ஆ) என்னும் பந்தியின் கீழான நிதிகள் வெளிநாட்டு மூலவளத்திணைக்களத்தினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

*நிதியாண்டு.*

**22.** (1) காஆஅ வின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) காஆஅ, அதன் வருமானமும் செவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும். காஆஅ வின்

கணக்குகள், அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளரின் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**23.** காஆஅ 15 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்றத்துக்குச் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கைகள் பகிரங்கப்படுத் தப்படுவதை செய்வித்தலும் வேண்டும். அறிக்கையிடுதல்.

## பாகம் V

## பொது

**24.** (1) எவரேனுமாள் - தவறுகள்.

(அ) காஆஅ வினால் வழங்கப்பட்ட அழைப்புக்கட்டளை யைப் பின்பற்றி காஆஅ விற்கு முன்னர் தோன்று வதற்குக் காரணமின்றித் தவறினால்; அல்லது

(ஆ) காஆஅ வினால் அவரிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு மறுமொழியளிப்பதற்குக் காரணமின்றி மறுத்தால்; அல்லது

(இ) காஆஅ வினால் அவருக்கு வழங்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட ஓர் அறிவித்தலின் அல்லது எழுத்தி லான கட்டளையின் அல்லது பணிப்பின் தேவைப்பாடு களுக்கு இணங்கியொழுகுவதற்குக் காரணமின்றி மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(ஈ) அழைப்புக்கட்டளை அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்டி ருந்து, தனது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை சமர்ப்பிப்பதற்குக் காரணமின்றி மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(உ) சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு வர் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கை யில் அலுவலரை எதிர்த்தால் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிட்டால்; அல்லது

(ஊ) காஆஅ அதன் தத்துவங்களையும், கடப்பாடுகளையும், கடமைகளையும் பூர்த்தி செய்வதில் அல்லது நிறைவேற்றுவதில் காஆஅ வுக்கு அறிந்துகொண்டு தடங்கல் செய்தால் அல்லது முட்டுக்கட்டையிட்டால்; அல்லது

(எ) காஆஅ வின் பணியின்மீது முறையீனமாகச் செல்வாக்குச் செலுத்துவதினை அல்லது தலையிடுவதினை இலக்காகக் கொண்ட ஏதேனும் செயலைப் புரிதல்; அல்லது

(ஏ) காஆஅ வுடன் ஒத்துழைத்துள்ள அல்லது ஒத்துழைப்பதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாளை அச்சுறுத்தினால், பயமுறுத்தினால் அல்லது அவரின்மீது முறையீனமாகச் செல்வாக்குச் செலுத்தினால் அல்லது அச்சுறுத்துவதற்கு, பயமுறுத்துவதற்கு அல்லது அவரின்மீது முறையீனமாகச் செல்வாக்குச் செலுத்துவதற்கு எத்தனித்தால்; அல்லது

(ஐ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக எவையேனும் அந்தரங்கமான தகவல்களை வெளிப்படுத்தினால்; அல்லது

(ஒ) நியாயமானசாட்டின்றிக் காஆஅ வின் வேறேதேனும் கட்டளைக்கு இணங்கியொழுகத் தவறினால்;

அத்தகைய ஆள் காஆஅ வின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புத் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஆளொருவர் அவமதிப்புத் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ளாரெனத் தோன்றுமிடத்து, காஆஅ அத்தகைய விடயத்தை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும். காஆஅ வின் அதிகாரத்துக்கெதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொவ்வொன்றும், அது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குக்கெதிராகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்றென்றாற்போன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாடலதாதல் வேண்டும்.

**25.** (1) (அ) காஆஅ வின் அல்லது அதன் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரின் கட்டளை, முடிவு, செயல் அல்லது செய்யாமை எதுவும் அரசியலமைப்பின் 126ஆம் அல்லது 140ஆம் உறுப்புரையின் கீழான வழக்கு நடவடிக்கைகளிற்றவிர, எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் கேள்விக் குட்படுத்தப்படுதலாகாது. வழக்குக்கெதிரான பாதுகாப்பு.

(ஆ) காஆஅ அல்லது அதன் எவரேனும் உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளரின் ஏதேனும் கட்டளை, முடிவு, செயல் அல்லது செய்யாமை தொடர்பாக அரசியலமைப்பின் 140ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட எழுத்தாணை நியாயாதிக்கம், மேன்முறையீட்டு நீதமன்றத்தினாலல்லாது உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட சூழ்நிலைகளிற்றவிர -

(அ) காஆஅ வின் எவரேனும் உறுப்பினர் அல்லது காஆஅ வுக்கு உதவிபுரிவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளருக்கெதிராக, அத்தகைய உறுப்பினர் அல்லது அலுவலர் அல்லது சேவையாளர் என்ற முறையில் நல்லெண்ணத்துடன் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, காஆஅ வின் அதிகாரத்துக்கெதிரான அவமதிப்புக் காகவன்றி, குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப் படுதலாகாது.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் காஆஅவினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் காஆஅ வின் எவரேனும் உறுப்

பினருக்கெதிராக அல்லது அத்தகைய அறிக்கையின் உண்மையான விபரம் வேறேதேனுமாளினால் வெளியிடப்பட்டமை தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

(இ) எவரேனுமாள் காஆஅ வுக்குச் சான்றை அல்லது ஆவணப்படுத்துகையை நல்லெண்ணத்துடன் வழங்குவதன் விளைவாக அத்தகைய ஆளுக்கெதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் அல்லது நிருவாக வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதல் ஆகாது.

விதிகள்.

**26.** (1) எந்த கருமங்களுக்காக இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படவேண்டுமென்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த கருமங்களுக்காக காஆஅ விதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் மூன்று (3) மாதங்களை விஞ்சாத நியாயமானவொரு காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

பொருள் கோடல்.

**27.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவழியாக தேவைப்படுத்தினாலொழிய-

"காணாமற்போன ஆள்" என்பது -

(i) வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் இடம்பெற்ற மோதலின்போது, அதன் விளைவாக அல்லது அதுசம்பந்தமாக அல்லது அதன் பின்னராக அல்லது "யுத்தச் செயலில் காணமற்போனவர்" என அடையாளம் காணப்படுகின்ற ஆயுதம் தாங்கிய படைகளின் அல்லது பொலிசின் உறுப்பினராகவுள்ளவர்; அல்லது

(ii) அரசியல் அமைதிக்குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் சம்பந்தமாக; அல்லது

(iii) "வலுக்கட்டயமாகக் காணாமற்போக்கப்பட்டமைகளிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயத்தில்" வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறு வலுக்கட்டாயமாக காணாமற்போக்கப்பட்டமையொன்றாக;

எவ்வாளின் கதி அல்லது இருப்பு தெரியாதிருப்பதாக நியாயமாக நம்பப்படுவதும், இருப்பதாகக் கொள்ளமுடியாதும் காணக் கிடைக்காதும் உள்ளவராக நியாயமாக நம்பப்படுவதும் ஆன அவ்வாள் என்று பொருள்படும்;

"காணாமற்போன ஆளொருவரின் உறவினர்" என்பது, அத்தகைய காணாமற்போன ஆள் தொடர்பாகப் பின்வரும் ஆட்களை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) வாழ்க்கைத்துணை;

(ii) மகவேற்கப்பட்ட பிள்ளைகள், திருமணம் புறத்த பிள்ளைகள் மறுதாரப் பிள்ளைகள்;

(iii) பெற்றோர் (ஒன்றுவிட்ட தாய், ஒன்றுவிட்ட தகப்பன், மகவேற்பவர் உட்பட);

(iv) இரத்த அல்லது அரையிரத்தச் சகோதரர் அல்லது சகோதரிகள் அல்லது மகவேற்கப்பட்ட சகோதரர்கள் அல்லது சகோதரிகள்;

(v) மாமன், மாமி, மச்சான் / மச்சாள், மருமகன்மார்/ மருமகள்மார்;

(vi) பேரப்பிள்ளைகளும் பேரன்களும்.

**28**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*